2nd August 1966]

திரு. ஆ. தங்கவேலு : சார், போக்கு வரத்து தடைப்படுகிறது என்று இந்தப் பாலம் கட்டப் படுகிறதா அல்லது வெள்ளத்தினால் ஆபத்து ஏற்படுகிறது என்று கட்டப்படுகிறதா அல்லது மத்திய சர்க்கார் அமைச்சர் திரு. ஓ. வி. அளகேசன் சொந்தக்காரர் திரு. முத்து முதலியார் என்பவருக்கு காண்ட்ராக்ட் கொடுக்க வேண்டும் என்பதற்காகக் கட்டப்படுகிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : குறிப்பாக ஒருவருக்கு காண்ட்ராக்ட் கொடுக்க வேண்டும் என்று எந்த ஒரு வேலையையும் கொடுப்பதில்லை. இது மெயின் ரோடில் இருப்பதாலும், கலுங்கல் பக்கத்தில் இருப்பதாலும், வெள்ளம் வந்தால் கெடுதல் வரும் என்றெல்லாம் இவற்றை யெல்லாம் மனதில் வைத்துத்தான் இந்த வேலை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே ஆலோசிக்கப்பட்டு, நிபுணர் பரிசிலனை செய்து சாங்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. 9-00 a.m.

சிதம்பரநாதன்பேட்டை மதகு

* 35 கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியம் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்காவில் சிதம்பரத்திலிருந்து நடராஜ புரம் ரோட்டில் பஸ் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கும் சிதம்பரநாதன்பேட்டை (கலுங்கு) மதகை இடித்துவிட்டு சீர் செய்ய அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் உண்டா ?

(இ) ஆமெனில், எப்பொழுது வேலை எடுத்துக்கொள்ளப்படும்?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Headquarters of Dharmapuri district

* 36 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. Minister for Food be pleased to state—

(*a*) the details of the proposals for housing the district offices at Dharmapuri for the new district; and

(*b*) whether there is any scheme before the Government for the improvement of Dharmapuri town so as to make it suitable as district headquarters and if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) In view of Emergency, a minimum necessary building programme for Dharmapuri district, phased over a period of three years, has been taken up with provision for construction of only important offices like Collector's Office, Office of the District Superintendent of Police and quarters for the Collector, the Superintendent of Police, the District

[2nd August 1966

Medical Officer, and the Ministerial staff and also an additional ward for increasing the bed strength of the existing taluk head-quarters hospital at a total cost not exceeding Rs. 29.17 lakhs.

(*b*) Yes.

Investigation of water-supply scheme is in progress and certain other proposals for improvement of bus-stand, vegetable market and provision of better facilities for higher education are under consideration.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், தர்மபுரி மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்ட பிறகும், அந்த அலுவலகங்கள் இன்னும் சேலத்தில்தான் இருக்கின்றன. அவற்றை எப்பொழுது தர்மபுரிக்குக் கொண்டு போக உத்தேசம் ?

கனம் திரு. வெ. ராமையா : கட்டட வசதி கிடைக்க வேண்டும். இப்பொழுது நெருக்கடி நிலைமையைப் பொருத்து, குறிப்பாக, அவசியமான கட்டடங்களை மட்டும் கட்டுகிறோம். மேலும் கட்டடங்கள் கிடைத்த பிறகு மற்றவை யோசிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், தர்மபுரி மாவட்டத்தைத் தனியாகப் பிரிக்கும்போதே இதையெல்லாம் எதிர்பார்த்திருக்க வேண்டும். கலெக்டருக்கு மட்டும் பங்களா கட்டிக் கொடுத்து விட்டால் போதாது. அங்குள்ள சிப்பந்திகளுக்கும் இடவசதி செய்து கொடுக்கத் திட்டம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : கலெக்டருக்கு பங்களா கட்டுவது மட்டுமல்ல திட்டம். அவருடைய ஆபீசுக்குக் கட்டடங்கள் கட்டுவதும், சிப்பந்திகளுக்கு ஸ்டேட் ஹவுசிங் போர்டு மூலம் வீடுகள் கட்டுவதும் திட்டமாகும்.

திரு. ம. கமலநாதன் : மாவட்டம் பிரிந்த பிறகு, கிருஷ்ணகிரிக்கு ஜுடிஷல் ஹெட்குவார்ட்டர்ஸ் மாற்றப்பட்டு, அலுவலகங்கள் வைக்க, கட்டடங்கள் கட்ட செயற்குறிப்பு காணப்படாததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : இந்தக் கேள்வி தர்மபுரி நியூ டிஸ்ட்ரிக்ட் கட்டடங்கள் சம்பந்தப்பட்டது. கிருஷ்ணகிரி பற்றித் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், தர்மபுரியில் வீடுகள் கட்டுவதற்கு வீட்டு வசதி போர்டுக்கு உத்தேசம் உண்டா ? திட்டம் இருக்கிறதாக அமைச்சருக்குத் தகவல் இருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : 1965-66-ம் ஆண்டிலேயே ஐந்து லட்சம் ரூபாய் செலவு செய்ய அவர்களிடம் திட்டம் இருக்கிறது.